بسم الله الرحمن الرحيم

# FRIDAY SERMON

**வெள்ளிக்கிழமை குத்து:பா** 29-11-2013

*Greatness of Salam*

# சலாத்தின் மகத்துவம்

**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலகெங்குமுள்ள முஸ்லீம்களுக்கு சமாதான வாழ்த்துக்கள் அறிவித்த பிறகு, கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் தஷஹ்ஹுத்தும் தஅவ்வுசும் அல்பாத்திஹாவும் ஓதி கீழ் வருமாறு கூறினார்.

இஸ்லாம் என்ற வார்த்தையின் பொருள் இறைவன்பால் உள்ள பரிபூரணமான கட்டுப்படுதல் என்றாகும். அதற்கு மற்றொரு பொருள் சமாதானம் என்றாகும். ஆகவே, முஸ்லீம் சமுதாயத்தின் நல்வாழ்த்துக்கள் என்பது சமாதானத்தை குறிப்பிடும் சலாம் ஆகும். திரு நபி(ஸ) அவர்கள் கூறுகின்றார் நல்வாழ்த்து அதாவது **“அஸ்ஸலாமு அலைக்கும்”** என்பதை ஒரு அருளாக உங்களுக்கு கற்பித்தது எல்லாம் வல்ல அல்லாஹ்வே ஆவான். அதனால் மக்களிடத்தில் சலாம் கூறுதல் ஒரு வழக்கமாக மாற்ற வேண்டும். சுருக்கமாக கூறினால், சலாம் சொல்தல் என்பது இஸ்லாமின் விலைவாய்ந்த ஒரு நிலையாகும். தனது சகோதரனுக்கு சலாம் கூறுதல் என்பது ஒவ்வொரு முஸ்லீம்களுடையவும் பொறுப்பும் அவர்களின் மதபரவும், நல்லொழுக்கபரவுமான கடமையும் ஆகும்.

சலாம் என்பது சமாதானத்தை நாடுகின்ற ஒரு நல்வாழ்த்து மட்டுமின்றி, ஆன்மீகவும் மனஉணர்ச்சியும் உள்ளத்தில் உருவாகின்ற சலாம், தனது சகோதரனின் மோட்சத்திற்கும் பாதுகாப்பிற்கும் சாந்திக்குமாக செய்கின்ற மிக ஆழமான ஒரு பிரார்த்தனையும் ஆகும். அத்தோடு, நமது ஒரு செயல்மூலமாகவும் எவருக்கும் வேதனைவிளைவிக்கமாட்டோம் என்ற ஒயற்ற அறிக்கையும் சலாம் சொல்வதில் அடங்கியிருக்கின்றது.

ஹஸ்ரத் அபுஹுறைரா(ர) ரிவாயத்து செய்திருக்கும் ஒரு திருநபி மொழி இவ்வாறாகும்.

**“உண்மையான நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் நீங்கள் சொர்க்கத்தில் நுழையமாட்டீர்கள். ஒன்றுக்கொன்று நட்பு இல்லாமல் நீங்கள் நம்பிக்கையின் பால் எட்டிவிடமாட்டீர்கள். ஒன்றுக்கொன்று ஒற்றுமையும் நட்பும் வளர்த்திட நான் ஒரு வழி கற்பிக்கின்றேன். நீங்கள் ஒன்றுக்கொன்று சலாம் கூறுங்கள்”** (புகாரி).

இஸ்லாம் நம்பிக்கையின் அடிப்படையில் சலாம் கூறுதல் மகத்தான பிரதிபலனுக்குரியதேயாகும். வெறுப்பும், பகையும் உள்ளத்தில் வைத்திருப்பவர்களோடு சலாம்

கூறுவோமேயென்றால் ஒரு வேளை அவர்களின் தீய எண்ணங்கள் விலகிவிடும். அதைக்குறித்து திரு நபி(ஸ) அவர்கள் கூறியிருப்பது இவ்வாறாகும்.

**“நீங்கள் பயணம் புரிகின்ற வேளைகளில் சந்திக்க நேர்வது மனதில் பகைவைத்திருப்பவர்கள் என்றால் அந்நபருக்கு சலாம் கூறுங்கள். அதுவழியாக அவர்களின் கோபவும் தீய எண்ணங்களும் மறைந்து போய்விடும்”**.

தனது முஸ்லீம் சகோதரன் சலாம் கூறினால் அவருக்கு சலாம் திருப்பிக்கூறிட தயக்கம் காட்டுகின்ற மனிதர்கள் இக்காலத்தில் உண்டு. இது அவர்களின் துரதிர்ஷ்டம் என்று சொல்லலாம். சலாம் கூறுவதும் திருப்பிக்கூறுவதும் ஒவ்வொரு முஸ்லீமுடையவும் பரிசுத்தமான கடமைகளில் பட்டதல்லவா? திரு குர்ஆனின் தெளிவான வசனங்கள் வழியாக கடமையாக்கப்பட்டிருக்கின்ற சலாம் திருப்பி கூறுதலை தவிர்த்துக்கொள்ள நமக்கு எப்படி தைரியம் வருகின்றது? ஒருவருக்கு சலாம் திருப்பிக் கூறுவதற்கு முன்னவே நீங்கள் அவரின் நம்பிக்கையின் அளவிற்கு எடை போட்டீர்களோ?

திருமறை கூறுகின்றது

**“உங்களுக்கு யாரேனும் நல்வாழ்த்துக்கள் தெரிவித்தால் அதனை விட சிறந்த முறையில் வாழ்த்துக்கள் அல்லது (குறைந்தது) அதனையே திருப்பிக் கூறுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றையும் கணக்கெடுப்பவன் ஆவான்”** (4-89).

அதனால், தனது சகோதரனுக்கு சலாம் திருப்பிக்கூற தயக்கம் காட்டுகின்றவர்களுக்கு நான் வழங்கும் ஒரு உபதேசம் இவ்வாறாகும். ஒன்றுக்கொன்று சலாம் கூறுவதால் ஒற்றுமையின் வாசல் திறக்கின்றது. குலைந்த பந்தங்கள், தற்கங்கள், எதிர் தற்கங்கள், ஆகியவற்றை முழுமையாக மாய்த்துக்கொள்ள, சலாம் சொல்வதினாலும் திருப்பி சொல்வதினாலும் முடிகின்றது.

**“தனது சகோதரனுடன் பந்தம் முறிந்த நிலையில் மூன்று பகலை கடந்து செல்வது ஒரு மூஸ்லீமுக்கு அனுமதியில்லை. ஒன்றுக்கொன்று சந்திக்கின்ற வேளைகளில் ஒருவர் மற்றொருவரிடமிருந்து முகம் திரும்பி கொள்வதற்கும் அனுமதியில்லை. அவர்களில் எவர் ஒருவர் மற்றொருவரிடம் சலாம் கூற ஆத்திரம் காட்டுகின்றானோ அவனே ஆவான் உத்தமன்”** (புகாரி).

சலாம் கூறுவதையும் திருப்பி சொல்வதையும் குறித்து இஸ்லாமிக போதனைகள் எளிமையை வளர்ப்பதாகும். பெருமை நடிப்பதற்கும், ஆணவத்திற்கும் இஸ்லாமில் எந்த இடவும் இல்லை. அந்த தீமைகளை முற்றிலும் அகற்றிட சலாம் கூறுதல் ஒரு வழக்கமாக்கிட வேண்டும். நபி(ஸ) அவர்கள் கூறியதாக புகாரியில் இடம்பிடித்துள்ள ஒரு ஹதீஸ் இவ்வாறாகும்.

**“முதலாவதாக சலாம் சொல்கின்ற நபரில் ஆணவம் இருப்பதில்லை”.**

ஒவ்வொரு முஸ்லீமும் ஒன்றுக்கொன்று சகோதரர்கள் ஆவார்கள். அவர்களுக்கு ஒன்றுக்கொன்று சில கடமைகள் இருக்கின்றது. சலாம் சொல்தல் அக்கடமையில் ஒன்றாகும். திரு நபி(ஸ) தெரிவிக்கின்றார். ஒரு முஸ்லீமுக்கு தனது சகோதரனிடத்தில் ஆறு கடமைகள் இருக்கின்றது.

1. **அவர் நோய்வாய்ப்பட்டு இருக்கும் வேளைகளில் அவரை சந்திக்க வேண்டும்**
2. **அவர் அருகாமையில் இருக்கும் போதும் இல்லாத வேளைகளிலும், அவரின் நன்மையை மட்டும் நாடிக்கொள்ள வேண்டும்.**
3. **அவரின் இன்னல் நேரங்களில் அவருக்கு உதவிபுரிந்திட வேண்டும்.**
4. **அவரை சந்திக்கின்ற வேளைகளிலெல்லாம் அவருக்கு நல்வாழ்த்துக்கள் (அஸ்ஸலாமு அலைக்கும்) கூறிக்கொள்ள வேண்டும்.**
5. **அவர் தும்மும் போது, இறைவனின் அருள் உண்டாகட்டும் என்று பிரார்த்தனை செய்ய வேண்டும்.**
6. **அவரது மைஅத்து தொழுகையில் பங்கு சேர வேண்டும்.**

ஹஸ்ரத் ஆதம் நபி(அ) க்கு முதன்மையாக அல்லாஹ் கற்பித்த கட்டளை சலாமை குறித்த இஸ்லாமிக பாடங்களே ஆகும். ஹஸ்ரத் அபுஹுறைர(ர) ரிவாயத்து செய்திருக்கும் ஒரு திருநபி மொழி இவ்வாறாகும்.

**“ஹஸ்ரத் ஆதமை படைத்தபோது அல்லாஹ் கூறினான் மலக்குகளுக்கு நீர் சலாம் கூறுவீராக. அவர்களின் பதிலுக்காக நீர் செவிசாய்ப்பீராக. ஏனெனில் உனதும் உன்னுடைய தலைமுறைகளுடையவும் நல்வாழ்த்துக்கள் அதுவே ஆகும்”.**

இந்த ஹதீஸைக் குறித்து சிந்திக்கின்ற போது ஒரு விஷயம் உறுதியாகின்றது. அஸ்ஸலாமு அலைக்கும் என்ற நல்வாழ்த்தை தவிர்த்துள்ள அனைத்து நல்வாழ்த்துக்களும் மனித உள்ளங்களால் உருவாக்க செய்ததேயாகும். சலாம் மனித படைப்பின் ஆரம்பத்தில் இருந்தே இறைவனிடமிருந்து கிடைத்த நல்வாழ்த்து என்பதில் சந்தேகமில்லை. அதனால் ஆகும் சலாமை தவிர்த்துள்ள அனைத்து நல்வாழ்த்துக்களுக்கும் எல்கை ஏராளமாக காணப்படுவது. உதாரணமாக ஒன்று கூறுகின்றேன். அதாவது, வேதனைகளுக்கு மேல் வேதனைகள் அடைந்திருக்கின்ற ஒருவரிடம் Good Morning என்று எப்படி வாழ்த்த முடியும். அதேவேளை எவ்வித வேதனைகளிலானாலும் சரி உங்களுக்கும் இறைவனிடமிருந்து சமாதானவும் மோட்சவும் கிடைக்கட்டும் என்ற பிரார்த்தனையாகின்ற சலாம் கண்டிப்பாக ஒருவருக்கு சொல்ல முடியும். அல்லாஹ்வின் உண்மையான அடியார்களுக்கு மலக்குகள் சலாம் கூறி சொர்க்கத்தின் வாயில் வழியாக அவர்களை அழைத்து செல்வதாக திருமறை வெளிப்படுத்துகின்றது.

**“தங்களின் இறைவனுக்கு அஞ்சுகின்றவர்கள் கூட்டம் கூட்டமாக சொர்க்கத்தில் அழைத்து கொண்டு வரப்படுவார்கள். அவர்கள் அதனை அடையும் போது அதன் வாயில்கள் திறக்கப்படும். மேலும் அதன் காவலர்கள் அவர்களிடம் உங்களுக்கும் சாந்தி உண்டாகுவதாக. நீங்கள் மகிழ்ச்சியாக இருங்கள். இதில் நுழைந்து என்றென்றும் வாழ்ந்து வாருங்கள் என்பார்கள்”** (29-74).

இறைவனின் பக்தராகிய அடியார்களின் ஆன்மாக்களை கொண்டு செல்வதற்கு வருகின்ற மலக்குகள் அவர்களிடம் சலாம் கூறுவார்கள் என்றும் திருகுர்ஆன் தெரிவிக்கின்றது.

**“(இறை அச்சத்துடன்) நடப்பவர்களாகிய அவர்கள் தூயவர்களாக இருக்கும் நிலையில் வானவர்கள் அவர்களின் உயிர்களை காப்பாற்றி உங்களுக்கு சாந்தி உண்டாகுவதாக. உங்களுடைய நற்செயல்களுக்கு பதிலாக நீங்கள் சொர்க்கத்தில் நுழையுங்கள் என்று கூறுவார்கள்”** (16-33).

**“சொர்க்கத்தில் நுழைகின்றவர்களுக்கு அல்லாஹ் “அஸ்ஸலாமு அலைக்கும்” கூறுவதாக திரு குர்ஆன் தெரிவிக்கின்றது. “ஸலாமுன்” என்று நிகரற்ற அன்புடையோனுமான இறைவனிடமிருந்து சொல்தல் உண்டு”** (36-59).

ஓ எனது இறைவா! வாழ்க்கையும் மரணவுமாக தொடர்புள்ள எல்லா சோதனைகளில் இருந்தும் நான் உன்னிடத்தில் பாதுகாவலை தேடுகின்றேன். எனது இறைவா! என் அல்லாஹ்வே! உனது விதிவிலக்கிற்கு ஏற்றவார் வாழ்ந்திடவும், உண்மை வழியில் உறுதியாக நிலைநிற்பவனாகவும் என்னை ஆக்குவாயாக. உனது அருள்களோடு நன்றியுடையவனாகவும், உன்னை வணங்குவதில் மகிழ்ச்சியும், திருப்தியும் உடையவனுமாக என்னை மாற்றுவாயாக. எனக்கு நன்மை மட்டும் நீ வழங்குவாயாக. தின்மையாக நீ விதிக்கச்செய்தவர்களின் நாசத்தில் இருந்து நீ என்னை காப்பாற்றுவாயாக. எனது பாவங்களாக நீ எண்ணுகின்ற அனைத்து செயல்களும் நீ மன்னிப்பாயாக. எனது இறைவா என் அல்லாஹ்வே! நான் செய்த தவறுகளை மன்னிப்பாயாக. நான் மறந்துபோனதும் மறைத்துக் கொண்டதுமான எல்லா தவறுகளுக்கும் மன்னிப்பை வழங்குவாயாக. என்னைவிட நன்றாக எனது குற்றங்களை அறிகின்றவனே, தொலைவில் இருப்பதை அருகாமையில் எட்ட செய்பவனே, இணையற்ற எனது இறைவா என்னை மன்னிப்பாயாக!. ஆமீன்

Issued by: R. Jamaludin Raother, Amir (South Zone)
Jamaat Ul Sahih Al Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web: www.jamaat-ul-sahih-al-islam.com
Phone: 09447001832

Translated by
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ TamilNadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817